DINAMALAR

22 NOV 2022

PAGE 1

# தேசிய கல்வி தினம்

**புதுச்சேரி, நவ. 22–**

இந்தியாவின் முதல் கல்வி அமைச்சரான மவுலானா அபுல் கலாம் ஆசாத்தின் பிறந்தநாளை நினைவு கூறும் வகையில் புதுச்சேரி பல்கலையில் தேசிய கல்வி தினம் கொண்டாடப்பட்டது.

விழாவில் ஆசிரியர் கல்வியியல் கல்லுாரிகளின் ஆசிரியர்கள், மாணவர்கள், பல்கலை ஊழியர்கள் பங்கேற்றனர்.

ஓய்வு பெற்ற பேராசிரியர் சந்திரசேகர ராவ் மரக்கன்றுகள் நட்டு வைத்து பேசினார்.

அண்ணா பல்கலைக்கழக கட்டடக்கலை நிபுணர் பேராசிரியர் பரிசுத்தராஜன் சிறப்புரையாற்றினார்.

பேராசிரியர் ராஜிவ் ஜெயின் கலாசாரம் குறித்து பேசினார்.

பேராசிரியர்கள் தரணிக்கரசு, செல்லமணி, பதிவாளர் மகேஷ் உட்பட கலந்து கொண்டார்.